தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12-9-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பங்கேற்கும் "Green Brains" போட்டிகள்

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளங்கலை ஆற்றல் & சுற்றுச்சூழல் பொறியியல் துறை மாணவர்களால் Ecofest'15 –Envisioning Feasibility செப்டம்பர் 16, 2015 அன்று நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் ஒரு முன்னோட்ட நிகழ்வாக செப்டம்பர் 6, 2015 அன்று Green Brains என்னும் மாவட்ட அளவிலான குழந்தைகள் பங்கேற்கும் போட்டிகள் காலை 9.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டன.

இளம் பொறியாளர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள் மற்றும் படைப்பாளர்களை உருவாக்கும் வண்ணம் நான்கு போட்டிகள் (வினாடி வினா, கலை படைப்புகள் உருவாக்கம், ஓவிய போட்டி மற்றும் வடிவமைப்புகள் உருவாக்கம்) நடத்தப்பட்டன. வினாடி வினாவில் மாணவர்களின் அறிவியல் மற்றும் பொறியியல் தொடர்புடைய கேள்விகளுக்கான பதில்கள் மிகவும் அறிவுப்பூர்வமானதாக அமைந்தன. கலை படைப்புகள் கழிவுகளை காசாக்கும் வகையில் அவர்களது சீரிய சிந்தனையால் விளைந்தவையாக இருந்தன. அழகான, உயிரோட்டமான கைவண்ணங்கள் பசுமை நகரம், எண்ணெயில்லா உலகம் மற்றும் மாசுபாடு கட்டுப்பாடு ஆகிய தலைப்புகளில் நடத்தப்பட்ட ஓவிய போட்டியில் உருவாயின. புதுப்பிக்கத்தக்க ஆற்றல், பசுமை கட்டிடங்கள் மற்றும் மாசுக் கட்டுப்பாடு ஆகிய தலைப்புகளில் மாணவர்களின் அறிவியல் அறிவினால் படைக்கப்பட்ட வடிவமைப்புகள் வழங்கப்பட்டன.

வினாடி வினா மற்றும் வடிவமைப்புகள் வழங்குதல் ஆகியவற்றில் ஒரு அணியில் இருவர் கலந்துக் கொண்டனர். பள்ளி மாணவர்களின் புத்தாக்க படைப்புகள் அனைவரும் வியக்கும் வகையிலும் நிறைய தகவல்களை தரும் வகையிலும் அமைந்தன. நடத்தப்பட்ட போட்டிகளுக்கு கல்லூரி பேராசிரியர்கள் வினாடி வினா - முனைவர். பாலாஜி கண்ணன், ஓவியப்போட்டி- முனைவர். லதா, கலை படைப்புகள் உருவாக்கம் - முனைவர். இந்துராணி, வடிவமைப்புகள் உருவாக்கம் - முனைவர். கோட்டீஸ்வரன் அகியோர்கள் நடுவர்களாக பங்காற்றினார்கள்.

போட்டிகளின் முடிவுகள் செப்டம்பர் **16** அன்று Ecofest'15 நிறைவு விழாவில் அறிவிக்கப்படும். பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இங்ஙனம் இந்நிகழ்வு மாபெரும் வெற்றியுடன் இனிதே நிறைவுற்றது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்